


"சுவருக்கு மட்டுமில்ல கமராவிலையும் கண் இருக்கும் கலிகாலம் கண்டியளோ..."

Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 221

வியாழக்கிழமை
04 ஜூலை 2024

ஆனி 20
வள்ளுவர் ஆண்டு 2055

## மாணவிகள் குளிக்கும் வீடியோக்கள் பதிவு!

# ஆறு.திருமுருகனால் நடத்தப்படும் சிறுவர் இல்லம் இழுத்துமூடல்!



### வடக்கு ஆளுநர் பணிப்புரை!

யாழ்ப்பாணம், ஜூலை 4

சிவபூமி அறக்கட்டளையின் தலைவரான கலாநிதி ஆறு.திருமுருகனால் யாழ்ப்பாணம் தெல்லிப்பழைப் பகுதியில் நடத்தப்பட்டுவரும் துர்க்காபுரம் சிறுவர் இல்லத்தையும், இன்னொரு சிறுவர் இல்லத்தையும் உடனடியாக மூடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. 11

## படகு கவிழ்ந்து ஒருவர் இறப்பு!



### நயினாதீவில் துயரம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவுக்குச்சென்ற பொருள்களை ஏற்றிச்சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளா னதில் ஒருவர் உயிரிழந்தார்.

நான்கு தொழிலாளர்களு டன் சென்று கொண்டிருந்த படகே இவ்வாறு கவிழ்ந்து 11



### வடக்கு மாகாணத்தின்

## மூன்று திணைக்களங்களுக்கு நேற்றுப் புதிய நியமனங்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 4

வடக்கு மாகாணத்தில், மூன்று முக்கிய பதவிகளுக்கான நியமனக் கடிதங்கள் வடமாகாண ஆளுநரால் வழங்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாணச் 11

## விபத்தில் சிறுமி பலி!

முல்லைத்தீவு, ஜூலை 4

முல்லைத்தீவு - முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், இடம்பெற்ற விபத்தில் சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

முள்ளியவளை, மாமூலைப் பகுதியில் நேற்று மாலை இந்த விபத்து இடம்பெற்றுள் 11

## சம்பந்தனின் புகழுடலுக்கு யாழில் இன்று அஞ்சலிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் புகழுடல் இன்று வியாழக்கிழமை விசேட விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

இதன்படி, இன்று முற்பகல் 10 மணி முதல் மாலை 4 மணி வரை யாழ்.நகரில் அமைந்துள்ள தந்தை 11



## வடமாகாணத்தில் பரவலாக மழை!

யாழ்ப்பாணம், ஜூலை 4

வெப்பச் சலனம் காரணமாக வடக்கு மாகாணத்தின் சில பகுதியில் 11

## குளவி கொட்டி ஒருவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 4

குளவிக் கொட்டுக்கு இலக்காகி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். குணசேகரம் வரதசிரோன்மணி (வயது 63) என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

பண்டத்தரிப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குள 11

### யாழ். நகரில்

## பொலிஸார் மீது தாக்குதல்: நான்கு இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையத்தில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் திருகோணமலையைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையத்தில் நேற்றுமுன்தினம் செவ் 11

## காங்கேசன்துறையில் மோட்டார் படையணி

யாழ்ப்பாணம், ஜூலை 4

குற்றங்களைத் தடுக்கும் முகமாக காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் விசேட மோட்டார் வாகன பொலிஸ் படையணி ஆரம்பிக்கப்படவுள்ளதாக காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தனகமகே தெரிவித்தார். 11

## சுதந்திரபுரத்தில் ஒருவர் கொலை

முல்லைத்தீவு, ஜூலை 4

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம் கொலனி பகுதியில் இளம் குடும்பத்தலைவர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். நாகரத்தினம் சுயதீபன் (வயது- 28) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார். வீட்டில் மயங்கிய நிலை 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'தமிழ்த்தேசியப் பேரவை' எங்களுக்கே சொந்தம்

## உரிமை கொண்டாடுகின்றது முன்னணி

## ஆதாரங்களும் உள்ளதாக சவால்



**யாழ்ப்பாணம், ஜூலை 4**

**தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அடையாளமான தமிழ்த் தேசியப் பேரவை என்ற பெயரைத் திருடி பயன்படுத்தப்படுகின்றது.இது அரசியலில் அநாகரிகமானதொரு செயற்பாடு.**

-இவ்வாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவதற்காகச் செயற்படும் தரப்பினர் தமிழ்த் தேசியப் பேரவை பெயரைப் பயன்படுத்தி வருகின்றது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும், சில பொது அமைப்புகளும் இணைந்து தமிழ்த்தேசியப் பேரவை என்ற பெயரைப் பயன்படுத்தி எழுத்துமூலமான உடன்படிக்கை மேற்கொண்டு கடந்த2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டிருந்தோம். இதற்கான ஆதாரங்கள் எம்மிடமுள்ளன.

இவ்வாறான நிலையில் சில சிவில் அமைப்புகளும், சில தமிழ்க் கட்சிகளும் முன்னெடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துகின்ற நாடகத்துக்கு தமிழ்த்தேசியப் பேரவை என்ற பெயர் பயன்படுத்தப்படுவது மிக வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

தமிழ்த்தேசியப் பேரவை என்ற பெயரை உபயோகிப்பதிலிருந்து உடனடியாக விலகித் தவறுக்கு, திட்டமிட்ட செயலுக்கு மன்னிப்புக் கோர வேண்டும். இல்லாவிடில் இதற்கு எதிராக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் நிலைமைக்கு நாங்கள் தள்ளப்படுவோம்- என்றார். (ச-66)

# வேட்பாளர் தீர்மானமில்லை

கொழும்பு. ஜூலை 4

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி இதுவரை இறுதி முடிவை எடுக்கவில்லை என்று அந்தக்கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சீன பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று நாடு திரும்பிய அவர், விமானநிலையத்தில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு கூறினார். (ச-25-44)

# ரணிலுக்கு ஆதரவே

யாழ்ப்பாணம், ஜூலை 4

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டால் ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்குவது பற்றி பரிசீலிக்கலாம் என்று மொட்டுக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்துள்ளார். (ச-44)

# பெண்கள் வலுவூட்டல் விசேட கடன் திட்டம்

கொழும்பு, ஜூலை 4

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனத் துறையில் பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பல்வேறு காரணிகளால் இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளில் பெண்களின் பங்களிப்புக் குறைவாக காணப்படுவதால் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ச)

# மாணவர் எதிர்காலத்தை இருளாக்கி விடாதீர்கள்

## கல்வியமைச்சர் வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 4

நாட்டை பொருளாதார நெருக்கடிகளில் இருந்து விடுவித்து நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீளும் வேளையில் ஆசிரியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் இணைந்து பிள்ளைகளின் எதிர்காலத்தை சூனியமாக்காதீர்கள்.

-இவ்வாறு கல்வி நிர்வாகசேவை உத்தியோகத்தர்களுக்கான நியமனங்கள் மற்றும் டிப்ளோமாதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்கள் வழங்கும் நிகழ்வில் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார நெருக்கடியிலும் ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்கான சவாலை நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம். பிள்ளைகளுக்கு கல்வியை கற்றுக் கொடுக்காமல் தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டால், பிள்ளைகளின் எதிர்காலம் இருண்டுவிடும்.

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கல்வி மறுசீரமைப்பின் மூலம் தொழில் வாய்ப்புக்கு ஏற்ற பட்டதாரிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-26)



# மொட்டு உதிர்வு பஸில் போராட்டம்

கொழும்பு, ஜூலை 4

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியுடன் கூட்டணி வைத்திருந்த சுமார் ஏழு பங்காளிக்கட்சிகள் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், பிரதமருடன் அவசர சந்திப்பை மேற்கொண்டுள்ளார் பஸில் ராஜபக்ச.

பங்காளிகளை தக்க வைக்கும் வகையில் பிரதமருடன் அவசர சந்திப்பை அவர் மேற்கொண்டுள்ளார் என்று தெரியவருகின்றது. இந்தச் சந்திப்பின்போது சமகால அரசியல் நிலைவரம் குறித்து சுமார் ஒரு மணிநேரத்துக்கு மேல் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

மொட்டுக் கட்சியுடன் கூட்டணி வைத்துள்ள மஹஜன எக்சத் பெரமுனக் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையிலேயே அந்தச் சந்திப்பில் பிரதமர் பங்கேற்றுள்ளார். மஹஜன எக்சத் பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் சிசிர ஜயக்கொடியும் சந்திப்பில் பங்கேற்றிருந்தார். (ச-44)

# தேர்தல் சட்டவிதிமுறைகள் கடைப்பிடித்தல் அவசியம்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 4

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் காலம் தாழ்த்தப்பட்டுள்ள போதிலும், தேர்தல் சட்டம் நடைமுறையிலேயே உள்ளது. எனவே குறித்த காலப்பகுதியில் வேட்பாளர்கள் அல்லது அரசியல் கட்சிகளை பிரசித்தப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளையோ அதற்காக பொதுச் சொத்துகளைப் பயன்படுத்துவதோ தண்டனைக்குரிய குற்றமாகும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் காலம் தாழ்த்தப்பட்டுள்ளமையாலும், இதுவரையிலும் அந்தத் தேர்தல் நடத்தப்படாமையாலும் தேர்தல் சட்டம் இன்னும் நடைமுறையிலுள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள் அரசியல் கட்சிகள், வேட்பாளர்களை பிரசாரப்படுத்தும் வகையிலோ அல்லது இழிவுபடுத்தும் வகையிலோ செயற்படுதல் குறிப்பாக உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுத் தாக்கல் செய்துள்ள வேட்பாளர்களை அவற்றுக்காகப் பயன்படுத்துதல் தேர்தல் சட்டம் மற்றும் சுற்றுநிருபத்தை மீறுதல் தண்டனைக்குரிய குற்றமாகும். உத்தேச தேர்தலானது சுதந்திரமானதும், நியாயமானதுமாக நடத்தப்பட வேண்டும் என்றும் தேர்தல் ஆணைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது. (ச-இ)

# கடன்மறுசீரமைப்பு முழுமை இல்லை!

## சுசில் தகவல்

கொழும்பு, ஜூலை 4

கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் இரண்டு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. மேலும் ஓர் உடன்படிக்கை தொடர்பில் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இரண்டு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் மற்றுமொரு உடன்படிக்கை தொடர்பில் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தப் பேச்சு நிறைவு பெற்றதும் இணக்கப்பாட்டுடன் அது சம்பந்தப்பட்ட பிரிவின் தகவல்களோடு நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் சேவையில் கண்ணியம் காக்கவும்

## ஜனாதிபதி வேண்டுகோள்

**கொழும்பு, ஜூலை 4**

**ஆசிரியர் பதவி உயர்வு அல்லது இடமாற்றத்தில் எவருக்கும் அநீதி இழைக்க அனுமதிக்கப்படமாட்டாது. ஒன்லைன் தொழில்நுட்பம் மூலம் எதிர்காலத்தில் தேவையான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான நியமனங்கள் மற்றும் டிப்ளோமாதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்றது.

இதில் அரசசேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட 60 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டதுடன் 1,706 பட்டதாரிகளுக்கும் 453 ஆங்கில டிப்ளோமா பெற்றவர்களுக்கும் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர் பணியில் இணைந்துகொள்ளும் அனைவரும் எதிர்கால சந்ததியினருக்காக தமது சேவைகளை அர்ப்பணிக்கவேண்டும். பிள்ளைகளின் கல்வியில் சகலரும் கவனம் செலுத்துமாறும் நாசகார செயல்களுக்கு இடம்கொடுக்கக் கூடாது. இது எமது எதிர்கால சந்ததியினருக்காக செய்யவேண்டும். ஆசிரியசேவை என்பது மற்ற சேவைகளில் இருந்து வேறுபட்டசேவை என்றே சொல்ல வேண்டும். அந்த கண்ணியத்தைப் பாது காக்க வேண்டும் - என்றார் . (ச-26)

# கீரை விலை சரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 4

கீரைகள் கூடுதலாக அறுவடை செய்யப்படுவதனால் அவற்றின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

கீரை அறுவடை தற்போது இடம்பெற்று வருகின்றது. சந்தைகளுக்கு கூடுதலான கீரைகள் வந்து சேர்வதனால் அவற்றின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. (ச-17)



# தேசிய தர நிர்ணயசபை அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூலை 4

தேசியதரநிர்ணயசபைஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

வர்த்தக அமைச்சரால் முன்வைக்கப்பட்ட தேசிய தர நிர்ணயசபை ஒன்றை அமைப்பது தொடர்பான பிரேரணைக்கே அமைச்சரவை அனுமதித்துள்ளது. ஏற்கனவே தரக்கட்டுப்பாட்டு மையம் செயற்பட்டு வரும் நிலையில் தர நிர்ணயசபை ஒன்றும் அவசியம் என பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே தேசிய தர நிர்ணயசபை உருவாக்கப்படவுள்ளது. (ச-6)

# வெதுப்பகங்களுக்கு ரூ. 160,000 தண்டம்


யாழ்ப்பாணம், ஜூலை 4

கொக்குவில் பகுதியில் சுகாதாரச் சீர்கேடாக இயங்கிய இரண்டு வெதுப்பகங்களுக்கு ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வெதுப்பகங்களுக்கு எதிராக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா. சஞ்சீவனால் தொடரப்பட்ட வழக்கில் ஒரு பேக்கரியை சீல் வைத்து மூடுமாறும், மற்றைய பேக்கரியை விரைந்து திருத்தி அமைக்குமாறும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

இந்த வழக்கு மீள விசாரணைக்கு நேற்று எடுத்துகொள்ளப்பட்ட போது நீதிவான் செ. லெனின்குமார் இரு பேக்கரி உரிமையாளர்களுக்கும் தலா 80 ஆயிரம் தண்டம் விதித்ததுடன் சுகாதாரம் பேணப்பட்டமைக்கான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டமையால் பேக்கரிகளை தொடர்ந்து இயங்க அனுமதியும் வழங்கப்பட்டது. (ச-26-20,66)

# பதில் மாவட்டச் செயலர்களுக்கு நியமனக் கடிதம் கையளிப்பு





யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பதில் மாவட்டச் செயலர்களுக்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தனவால் நேற்று நியமனக் கடிதம் வழங்கிவைக்கப்பட்டது. ம.பிரதீபன் மற்றும் எஸ்.முரளிதரன் ஆகிய இருவருக்குமே முழு நேர பதில் மாவட்டச் செயலராக பணியாற்ற அமைச்சரவை அனுமதி வழங்கியது. (ச-26,125,66)

# 37,500 தென்னங்கன்றுகள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

வடக்கில் கடந்த இரண்டு மாதத்தில் 37 ஆயிரத்து 500 தென்னங்கன்றுகள் இலவசமாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று தென்னை அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள பயனாளிகளுக்கு இந்தத் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (ச-17)

# பட்சி தினம் தெரியுமோ?

'நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை' என்டு ஒரு பாட்டிருக்கு.

அதைமாதிரி நல்லூர் முருகன் கோயில் வீதித்தடை பற்றின வர்த்தமானிக்கு எதிரா முனிசிபல்காரரில வழக்குப் போட்ட பதினேழு பேரின்ர நினைப்பிலையும் மண்ணள்ளிப்போட்ட அந்த 'ருவிஸ்ட்' என்னெண்டு அறிய உங்களுக்கும் ஆர்வமா இருக்கும். வர்த்தமானிக்கு எதிரா பதினேழு பேர் தானே கேஸ்போட்டவை, ஆனால் அந்த வர்த்தமானிக்கு ஆதரவா, அதே வீதித்தடைக்குள்ள இருக்கிற மிச்ச வீட்டுக்காரர், கடைக்காரர் என்டு ஐம்பது பேர் சைன் பண்ணி முனிசிபலுக்கு குடுத்திருக்கினம். நல்லூர்த்திருவிழாக்கால வர்த்தமானியால கனக்கப் பிரச்சினையளுக்கு தீர்வு வரும் என்டு அந்த ஐம்பது பேரும் நம்புகினம். அதோட நல்லூரான்ர கோயிலின்ர புனிதமும், இவ்வளவு காலமும் இருந்த நடைமுறையும் பாதிக்காமல் எல்லாருக்கும் ஒரேமாதிரி இருக்கோனும் என்டும் அவை நினைக்கினம்.

'வெளிவீதியில செருப்புப் போடக்கூடாது, வாகனம் ஓடக்கூடாது என்டு இறுக்கமா நிக்கிறதுக்கும் ஒரு முக்கியமான காரணம் இருக்கு. திருவிழாக்காலத்தில ஆயிரக்கணக்கான ஆக்கள் பிரதட்டை வெளிவீதியிலதான் செய்யிறவை. கண்டகண்ட இடங்களுக்கும் இவையள் போய்வந்த செருப்பிலையும், வாகனரயரிலையும் இருக்கிற கிருமியள் வெளிவீதியில கொட்டியிருக்கிற மணலில பரவினால் முந்தியொருக்கா வந்தமாதிரி பிரதட்டை பண்ணுறவைக்கு தோல்வருத்தம் வரக்கூடும். பக்தி என்டதையும் தாண்டி இது சுகாதாரத்தோடையும் சம்பந்தப்பட்ட விசயம் என்டதும் வர்த்தமானிக்கு ஆதரவா நிக்கிற ஐம்பது பேரின்ரையும் வாதம். இந்த விசயங்களை அவை முனிசிபல்காரருக்கு சொல்லி, இணக்கத்துக்கு போகக் கூடாது என்டு ஒற்றைக்காலில நிண்டிருக்கினம்.

நல்லூரான்ர நடைமுறையளை சிலர் படம் காட்டுறதுக்காக மாத்த ஏலாது. முருகன் என்டா எல்லாருக்கும் பொது. இருபத்தைஞ்சு நாள் வீட்டில இருந்து வீதித்தடை மட்டும் வெறுங்காலோட போனால் கால் தேஞ்சோ போடும்? வாகனத்தையும் தடைக்கு அங்கால எங்கையும் விட்டுப் பாவிக்கலாம் தானே? அப்பிடி இல்லை, அவை மட்டும் திருவிழாக்காலத்தில் செருப்போடையும், வாகனத்தோடையும் போகலாமெண்டால், அதை அவைக்கு மட்டுமில்லாமல் எல்லாரும் செருப்போட போகலாம், எல்லாரும் வாகனத்தோட போகலாம் எண்டு மாத்துங்கோ எண்டு முனிசிபல்காரருக்கு அந்த ஐம்பது பேரும் ஒரு 'செக்'வைச்சிருக்கினம்.

இப்பிடியொரு திருப்பம் வருமெண்டு எதிர்பாக்காத முனிசிபல்காரருக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை. வர்த்தமானியில சொல்லுப்பட்ட பத்து விசயங்களையும் மாத்தினால் இந்த ஐம்பது பேரும் குழம்புவினம், மாத்தாட்டி அந்த பதினேழு பேரும் கேஸை நடத்துவினம். ஏறச்சொன்னால் எருதுக்கு கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்கு கோபமாம் என்ட நிலையில முனிசிபல்காரர் முழிபிதுங்கவேண்டி வந்திட்டுது. இந்தக் குழப்பத்திலையோ என்னவோ கோர்ட்ஸில இணக்கமா போறதுக்கெண்டு ரெடி பண்ணின ஒப்பந்தத்தில முனிசிபல்காரர் சைன் பண்ணாமல் விட்டிட்டினம். சும்மா அநாமதேய நோட்டீஸ் மாதிரி, சைன் ஒண்டும் இல்லாமல் பிரிண்ட் எடுத்த பேப்பரைக் குடுத்தால் அதை என்னெண்டு கோர்ட்டில ஏற்பினம்? அதால வாற திங்கட்கிழமை அடுத்த தவணை போட்டிருக்காம்.

அண்டைக்கு என்னென்ன திருவிளையாடலை நல்லூரான் செய்யப்போறானோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஜூலை 4

அளவெட்டி தெற்கு அ.மி.த.க.பாட சாலையின் 193 ஆவது நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலையின் டானியல் பூவர் அரங்கில் பாடசாலை அதிபர் திருமதி நிரஞ்சனா ஜெயகிறிஸ்ரோ தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் பிரதம விருந்தினரா கவும், வலிகாமம் வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவலிங்கம் முரளிதரன் சிறப்பு விருந்தினரா கவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ச-66)

✦ ✦ ✦ ✦

யாழ்ப்பாணம், ஜூலை 4

மானிப்பாய் இந்துக்கல்லூரி யின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இன்று வியாழக்கி ழமை காலை 9 மணிக்கு இடம்பெற வுள்ளது. கல்லூரி முதல்வர் செ.இளங்கோ தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்ள வுள்ளார். (ப-66)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 4

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர், வடக்கு - கிழக்கு மாகாண சிவில் சமூகங்களை உள்ளடக்கியுள்ள 'தமிழ் மக்கள் பொதுச் சபை' அமைப்புடன் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்தக் கலந்துரையாடல் யாழ். தந்தை செல்வா மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

வேலைவாய்ப்புக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் நிர்வாகத்தினரின் கலந்துரையாடலில் அனைவரையும் பங்குபற்றுமாறு சங்கத்தினர் கேட்டுள்ளனர். (ச-25)

# பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 4

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு அதிபர் திருமதி லலிதாமலர் முகுந்தன் தலைமையில், கொடிகாமம் ஏ-9 வீதியில் அமைந்துள்ள நட்சத்திரமஹால் மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் மருத்துவர் ஆனந்தமயில் நித்திலவர்ணன் கலந்து கொள்ளவுள்ளார். (ச-25-159)

## மரண அறிவித்தல்



மண்ணில் 30 . 11 . 1955

விண்ணில் 02 . 07 . 2024

### திருமதி சிவபாதசுந்தரம் நாகேஸ்வரி

இமையாணன் வடக்கு உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாதசுந்தரம் நாகேஸ்வரி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் யசோதையம்மா ஆகியோரின் மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னமணி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கந்தையா சிவபாதசுந்தரத்தின் அன்பு மனைவியும் யசோதரன் (லண்டன்), கஜேந்திரன் (ஆசிரியர், கரணவாய் மகா வித்தியாலயம் ), சுபேந்திரன் (கொமர்ஷல் வங்கி, முன்னாள் உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பர்மினாவின் (கொமர்ஷல் வங்கி உத்தியோகத்தர், திருநெல்வேலி) அன்பு மாமியாரும் சூரியதேவ் இன் பேர்த்தியாரும் நாகேஸ்வரன் (அவுஸ்திரேலியா), சிவகுமார் (அவுஸ்திரேலியா) ஆகியோரது அன்புச் சகோதரியும் மஞ்சுளா (அவுஸ்திரேலியா), சுதாமா (அவுஸ்திரேலியா), நிர்மலன் (கனடா), நிரஞ்சினி (கனடா), நந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் கமலாதேவி (லண்டன்), சிறீகரன் (லண்டன்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2024) வியாழக்கிழமை மதியம் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புக்கு 077 4701307

தகவல்: குடும்பத்தினர்

---

பத்தமேனி அச்சுவேலி

ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

**குரோதி வருட மகோற்சவம் 2024**



அம்பாளின் 08 வது வருட மகோற்சவம் எதிர்வரும் குரோதி வருஷம் 11.07.2024 வியாழக்கிழமை காலை 10:00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்களும் வழமைபோன்று மகோற்சவம் இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

நன்றி

ஆலய தர்மகர்த்தா.
பொ. செல்வராசா.

---

## மரண அறிவித்தல்



தோற்றம் 29 . 07 . 1949

மறைவு 02 . 07 . 2024

### திருமதி குலராஜசிங்கம் ஈஸ்வரி

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி குலராஜசிங்கம் ஈஸ்வரி கடந்த (02.07.2024) அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் அமரர்களான செல்லப்பா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும். அமரர்களான வைத்திலிங்கம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும். குலராஜசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும். சுதர்சினி (லண்டன்). சுபாஸ்கரன். ஜெயகரன் ஆகியோரின் அன்புத் தாயும். வாகீசன் (லண்டன்). நித்தியா (அபிவிருத்தி உத்தியோகத்தர். பிரதேச செயலகம். கரைதுறைப்பற்று). சுதர்ஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர். பூநகரி பிரதேசசபை) ஆகியோரின் அன்பு மாமியாரும். சேயோன் (லண்டன்). நிலானி (லண்டன்). வாரணி. சேயன். அனன்யா. அக்ஷிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 1.00 மணியளவில் பூதவுடல் ஆலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு : 077 3028 656
077 0491 562

தகவல்: குடும்பத்தினர்.

---

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

## சின்னச்சாமிக் குருக்கள் சண்முகலிங்கம் ஐயர்

(ஆதீனகர்த்தா ஸ்ரீவீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்)



தோற்றம் 15.01.1938

மறைவு 21.05.2020

திதி: வைகாசி அபரபக்க சதுர்த்தசி

பாசமான உயிர் ஒன்று பாரினிலே
எம்மை பரிதவிக்க விட்டுவிட்டு
அப்பப்பா என்றழைக்க புதிதாக
- மலர்ந்த
உறவுகளை அரவணைக்காது
- வண்ணை
வீரமாகாளியம்மன் காலடியில்
சரணடைந்து நான்கு ஆண்டுகள்
- கடந்தனவே !
உமது நினைவுகள் என்றும்
- எமமிடத்தே
நீங்காது உள்ளனவே அப்பா!

இல.39, விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# அதிகாரப்பகிர்வும் ரணிலும்

“இரா.சம்பந்தன் எப்பொழுதும் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்காகப் பங்காற்றினார். அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்படவேண்டிய விதம் தொடர்பில் அவருக்குத் தனியான நிலைப்பாடு இருந்தது. அதை நிறைவேற்றுவதே அவருக்கான அஞ்சலி” இப்படித் திருவாய் மலர்ந்தருளியிருப்பவர் வேறுயாருமல்லர், சாட்சாத் இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான். அவரது இந்த உரையின்படி, தான் உட்பட சிங்களத்தலைவர் எல்லோருமே அதிகாரப்பகிர்வை தங்கத்தாம்பாளத்தில் ஏந்தி, அதைத் தருவதற்கு தயாராக இருப்பது போலவும், தமிழர்கள் தான் அதனை வேண்டாமென்று சொல்வது போலவும் அர்த்தம் கொள்ளமுடியும். உண்மையாக அதிகாரப் பகிர்வுதான் சம்பந்தருக்கான அஞ்சலி என்று ரணில் உளமாரக் கருதியிருந்தால், அதனை வெறுமனே வாய் ஜாலத்தில் காட்டாமல், அதிகாரப்பகிர்வை வழங்கி விட்டு, சம்பந்தருக்கு உண்மையான அஞ்சலியைச் செலுத்திவிட்டேன் என்று சொல்வதே பொருத்தமாயிருக்கும்.

அதிகாரப்பகிர்வு அல்லது சமஷ்டி என்ற சொல்லைக் கேட்டாலே, பேயைக் கண்டது போல சிங்கள அரசியல்வாதிகள் அலறித்துடிப்பதுதான் இலங்கையின் வரலாறெங்கும் நீண்டு வருகின்றது. ஆளும் கட்சியில் இருப்பவர்கள் அதிகாரப்பகிர்வை வழங்குவது பற்றிக் கதைத்தால் எதிர்க்கட்சியில் இருக்கும் எல்லோரும் வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் இறங்கிவிடுவார்கள். அதனால் ஆளும் கட்சி அந்த எண்ணத்தை தூக்கிப் போட்டுவிடும். பின்னர் ஆட்சிமாற்றத்தால் முன்னர் எதிர்க்கட்சியாக இருந்தவர்கள் ஆளும் கட்சிக்கு வந்து, அவர்கள் அதிகாரப்பகிர்வு பற்றிய நகர்வை மேற்கொண்டால், காட்சி அப்படியே தலைகீழாகி விடும். எந்தக் கட்சி முன்னர் அதிகாரப்பகிர்வை முன்வைத்து இப்போது எதிரணியில் இருக்கிறதோ, அந்தக் கட்சியே அதிகாரப் பகிர்வுக்கு எதிராக சீறிப்பாய்வதோடு, சிங்கள மக்களையும் அதிகாரப்பகிர்வுக்கு எதிராகப் போராடத் தூண்டிவிடும். இப்படி மாறி மாறி தங்கள் அதிகார சுகத்துக்காக ‘அதிகாரப்பகிர்வு’ என்ற சொல்லாடலை சிங்களக் கட்சிகள் பயன்படுத்துகின்றனவேயன்றி, இதயசுத்தியோடு அவை செயற்படுவதில்லை.

தமிழ்மக்களுக்கு அதிகாரப்பகிர்வைவழங்குவதற்கான சந்தர்ப்பம் இரண்டு பேருக்கு கிடைத்திருந்தது. ஒருவர், மஹிந்த ராஜபக்ச. மற்றவர் ரணில் விக்கிரமசிங்க. 2009 இல் போர் முடிவுக்கு வந்தபோது, மஹிந்த சொல்லும் எதனையும் கண்ணை மூடிக்கொண்டு கேட்க சிங்களமக்கள் தயாராக இருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வொன்றை மஹிந்த வழங்கியிருந்தால், அதனை சிங்கள மக்களோ, எதிரணிகளோ எதிர்த்திருக்கப்போவதில்லை. ஆனால் மஹிந்த அப்படியொரு அதிகாரப் பகிர்வை வழங்கத் தவறினார். பொருளாதார நெருக்கடி மேலெழுந்து, அரகலய போராட்டம் உச்சம் பெற்று, கோத்தாபய விரட்டியடிக்கப்பட்டு, ஜனாதிபதிக்கதிரையில் ரணில் விக்கிரமசிங்க அமர்ந்தபோது, அவர் சொல்வதை எதிர்க்கும் சக்தி எவருக்கும் இருக்கவில்லை. பொருளாதார நெருக்கடி என்ற பித்தம் தீர்வதற்காக எதையும் செய்ய மக்களும், பிற கட்சியினரும் தயாராகவே இருந்தனர். பொருளாதார நெருக்கடியின் மூலகாரணமே இனப்பிரச்சினைதான். எனவே இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வை வழங்கி, இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு நிரந்தரத் தீர்வை ரணில் முன்வைத்திருந்தால், நாட்டில் இனியொரு போதுமே பொருளாதாரச் சரிவென்பதற்கு சாத்தியமில்லாமல் போயிருக்கும். சந்திரிகா கொண்டுவந்த தீர்வுத்திட்டத்தை நாடாளுமன்றில் வைத்து,தீயிட்டு அந்த அதிகாரப்பகிர்வை நடைமுறைப்படுத்தவிடாமல் செய்த ரணில், தானாக மனமுவந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வை முன்வைப்பாரென நினைப்பது அபத்தம். அதிகாரப்பகிர்வை வழங்கவென காலமளித்த சந்தர்ப்பத்தை தவறவிட்டுவிட்டு, இப்போது சம்பந்தருக்கு செய்யும் அஞ்சலி அதிகாரப்பகிர்வே என பசப்பு வார்த்தை பேசுவது எந்தவகையில் நியாயம்?



## யாழ்ப்பாண மாவட்டத்துக்கு

# இந்தியாவின் நிதியுதவியில் மழைநீர் சேகரிப்புத் திட்டம்

**யாழ்ப்பாணம், ஜூலை 4**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் தூய்மையான குடிதண்ணீரை விநியோகிப்பதற்காக இந்திய அரசின் நிதியுதவியில் 3000 மழைநீர் சேகரிப்புத் தாங்கிகள் அமைக்கப்படவுள்ளன.**

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

3 ஆண்டுகளில் இந்தத் திட்டம் முடிக்கப்படவிருந்தபோதிலும் நிதி மற்றும் தொழில்நுட்பம் காரணமாக, திட்ட காலம் நீடிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தத் திட்டத்தின் கீழ் மீதமுள்ள நிதியில் 934 மழைநீர் சேகரிப்புத் தொட்டிகளை அமைக்க நீதி மற்றும் அரசமைப்பு சீர்திருத்த அமைச்சர் முன்வைத்த முன்மொழிவுக்கு அமைச்சர்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளது. (ச-இ)

## மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலை

மருந்துப் பொருள்களுக்குக் கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்யப்படவுள்ளதாக தேசிய மருந்து வகைகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தெரிவித்துள்ளது. இந்தக் கட்டுப்பாட்டு விலை தொடர்பான விடயங்கள் வர்த்தமானியில் வெளியிடப் படுமெனவும் தெரிவித்துள்ளது. (ச-6)

## மதுவரித் திணைக்களம் குவித்தது 105 பில்லியன்

கொழும்பு , ஜூன் 4

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதி வரை மதுவரி வருமானத்தின் மூலம் 105 பில்லியன் ரூபாவை ஈட்ட முடிந்துள்ளது என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 17 பில்லியன் ரூபா அதிகரிப்பு என மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் எம்.ஜே.குணசிறி குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## டெங்கு வடக்கில் உயர்வு

கொழும்பு , ஜூன் 4

மேல் மற்றும் வட மாகாணத்தில் டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாகத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. கொழும்பு மாவட்டத்தில் 6,344 டெங்கு நோயாளர்களும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3,974 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ச-இ)

## ‘ஏ.ஐ.’ இலங்கை 72ஆம் இடம்

கொழும்பு, ஜூலை 4

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வளர்ச்சி தொடர்பாக 138 நாடுகளிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இலங்கைக்கு 72 ஆவது இடம் கிடைத்துள்ளது. (ச-6)

## நாளை

05.07.2024

**வெள்ளிக்கிழமை - ஆனி - 21**

சுபநேரம் : 05.57 - 07.27

ராகுகாலம் : 10.27 - 11.57

## நாளொரு நல்வார்த்தை

**வாழ்க்கையானது வாழ்வதற்கான மதிப்புடையதா? அது வாழ்பவரைப் பொறுத்தது.**

*- வில்லியம் ஜேம்ஸ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்

20 • 10 • 1946



மறைவு

03 • 07 • 2024

## திரு.துரையப்பா மாணிக்கவாசகர்

**(மிருதங்க, தவில், சங்கீதமேதை, அபிராமிதாசன், கலைஞானகேசரி கலாபூசணம் மறவனூர் T.M. வாசகர்)**

சாவகச்சேரி மறவன்புலோவை பிறப்பிடமாகவும் தம்பசிட்டி வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூசணம் மறவனூர் T.M.வாசகர் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் துரையப்பா மாணிக்கவாசகர் அவர்கள் நேற்று (03.07.2024) புதன்கிழமை அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மூத்த மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், இராசலட்சுமியின் பாசமிகு கணவரும், செ.தவமணிதேவி, சி.சுப்புலட்சுமி, து.சுப்பிரமணியம், சி.பத்மினி, காலஞ்சென்ற ச.மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ராதிகா, ராஜிதா (சுவிஸ்), ராஜீவன் (சுவிஸ்), ராஜசிறி (பிரதேசசெயலகம், பூநகரி), ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரதாசன், சுதாகரன் (சுவிஸ்), அனுசியா (சுவிஸ்), தர்மேந்திரா (மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிகரன், நிஷானி, கனிஸ்கா, நிதுன், ஆதிரா, அகரன், விகாஸ், காசினி, மிகேஸ் ஆகியோரின் செல்லப்பேரனும், கிருஸ்ணமூர்த்தி, காலஞ்சென்றவர்களான அருச்சுனராஜா, தர்மராஜா நகுலராஜா மற்றும் இராசபூபதி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**075 141 2185**
**077 666 0342**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(CS 866) V-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவலைகளில் 15 ஆண்டுகள்



அமரர்

## சுப்பிரமணியம் நாகராஜா

(Retired MSO Jaffna Post Office)

திதி :- சதுர்த்தசி 04.07.2024 வியாழக்கிழமை

மலர்வு 18.07.1930 — உதிர்வு 22.06.2009

அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காக நம் குடும்பத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து அனைவரது வாழ்வினையும் பிரகாசிக்கச்செய்த அமரர் சுப்பிரமணியம் நாகராஜா அவர்களது ஆத்ம சாந்திக்காக 04.07.2024 வியாழக்கிழமை இன்று கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் பர்வதவர்த்தினி அம்பாள் சமேத இராமலிங்க சுவாமிக்கு மோட்ச அபிசேக ஆராதனைகள் இடமபெற்று தொல்புரம் முதியோர் இல்லம், சிவபூமி மனவிருத்திப் பாடசாலை, தெல்லிப்பளை துர்க்காதேவி மகளிர் இல்லம், சுன்னாகம் வாழ்வக விழிப்புல வலுவிழந்தோர் இல்லம், வவுனியா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக முதியோர் இல்லம், புதுக்குடியிருப்பு இனிய வாழ்வு இல்லம் ஆகிய பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர்கள், முதியோர்களுக்கு விசேட மதிய உணவும் வழங்கப்படும்.

தகவல் :


குடும்பத்தினர் சார்பாக

மகன் - நாகராஜா விஜயகுமார் (சங்கர்) - சுவிஸ்

(CS/860) J-1

# மரண அறிவித்தல்

பிறப்பு 06 . 05 . 1932 — இறப்பு 28 . 06 . 2024



## அப்பாக்குட்டி செல்லத்துரை

மீசாலையைப் பிறப்பிடமாகவும் மொறட்டுவ சொய்சாபுரம், லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி செல்லத்துரை கடந்த (28.06.2024) வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி - பொன்னி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், மஞ்சுளா, நிர்மலா, பாஸ்கரன், விஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், தனபாலசிங்கம், ஸ்ரீபாலன், டிகாயினி ஆகியோரின் மாமனாரும், தக்ஷணன், திருஷானா, ருக்ஷானா, ஹகன், மானஸ் வேதாந் ஆகியோரின் அன்புப் பேரனும், தங்கம்மா, காலஞ்சென்றவர்களான கணபதி, சின்னாச்சி, நாகமுத்து, கந்தையா, தங்கமுத்து, முருகேசு, தெய்வானை, இளையதம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.07.2024) வியாழக்கிழமை லண்டனில் உள்ள Golderi Grecn மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு 2. 00 மணியளிவில் தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க.சண்முகம்
077 751 8525

(cs 55262) (N-1)

# 31ஆம் நாள் அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 15 . 11 . 1956 — மறைவு 04 . 06 . 2024



கடந்த (04.06.2024) செவ்வாய்க்கிழமையன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி

## அமரர் வரதராசன் ஐராங்கனி

திதி: திரயோதசி

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிரியைகள் இன்று (04.07.2024) வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து பிள்ளையார் கோவிலடி, தொண்டைமானாற்றிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தலைலவி மறைந்த செய்தியறிந்து நாம் துயருற்றிருந்த வேளையில் பல்வேறு விதத்தில் உதவி புரிந்தவர்களுக்கும், நேரில் வந்தும், தொலைபேசி வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிள்ளையார் கோவிலடி,
தொண்டைமானாறு.

குடும்பத்தினர்.

(CS/55564) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு

07 . 03 . 1930

இறப்பு

01 . 07 . 2024



## கோபாலபிள்ளை அழகம்மா

சங்கத்தானை சாவகச்சேரியை (மீனாட்சி அம்மன் கோவிலடி) பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கோபாலபிள்ளை அழகம்மா கடந்த (01.07.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - அன்னம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னையா - திலகவதி தம்பதியரின் மருமகளும், கோபாலபிள்ளையின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான இரத்தினம், சிவகுரு, சரஸ்வதி (கண்மணி), கைலாயபிள்ளை, செல்லையா, சிவானந்தம், கணேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான யோகாம்பிகை, சறோஜினி, சின்னத்தம்பி, செல்லம்மா, பரமேஸ்வரி, தெய்வானை மற்றும் ரட்ணபூபதி, பரமேஸ்வரி, தையல்நாயகி, சின்னத்தம்பி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற குணரட்ணம் மற்றும் பிறேமாவதி, பத்மாவதி, லீலாவதி (சுவீடன்), புனிதவதி, இராஜரட்ணம் (நோர்வே), ரேவதி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும். பேபி, கனகசேகரம், கணேசலிங்கம், விஜயகாந்தன், காலஞ்சென்ற குணபாலசிங்கம் மற்றும் ஞானசௌந்தரி, சிறிகணேஸ்வரி, சிற்சமூர்த்தி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற ராஜ்வதன் மற்றும் சதீஸ்வரன் - காலஞ்சென்ற கயந்தி மற்றும் ஜெயரூபன் - சந்திரிக்கா, விஜயரூபன் - ஷிந்துஷா, க்வீந்திரா - மதியழகன், சுவர்ணா - நந்தசேகரன், டயானா - சுந்தரேஸ்வரன், தர்ஷன், பிரசாந்தி - சதீஸ்குமார், மீரா-ஜெனகன், கஜந்தர்- விபுஷனா, காலஞ்சென்ற கஜந்தி - சதீஸ்வரன் மற்றும் விமலதாசன், புகதீசன் - அகிலா, காலஞ்சென்ற சோமகுமார் மற்றும் சகானா, லக்ஷிகா, டிவாகர், ஜிவாஸ்கர், டினேஷர், சுகன்யா - சிந்தியன், சுதர்சன்-கீர்த்தனா, தனுசியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், திருஷிகா, கிருஸ்பா,தர்மினா, அருணிகா, அருணன், ஆருஜன், ஆர்த்திகா, ஆராதனா, பிரித்தா, அஸ்வின், விசாகன், அபிசனா, சினேறுகா, அதிசயன், றேனுஜா, கிருஷிகன், சபிநஜா, பவினயா, பகலவி, தேசிகன், ஹன்சிகன், ஜமீரன், ஜக்தீஷ், மித்திரா, திவ்ான், றித்வா,கவீனா, எப்ஸிபா, இஷான்கிரிஷ், கயிராதேவி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சாரதா வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 723 8319

(CR/42766) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாய்களுக்கு கருத்தடை

யாழ், ஜூன் 4

நாய்களுக்கான இலவசக் கருத்தடைச் சத்திர சிகிச்சை, நயினா தீவு யாத்திரிகர் மடத்தில் இன்று வியாழக்கிழமை காலை 8 மணி முதல் இடம் பெறவுள்ளது என்று அறிவிக்கப்படடுள்ளது. (ம-22-66)


## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

➤ பொதி செய்பவர் / பொதி சுமப்பவர் (25 - 35 வயதிற்குட்பட்டவர்கள்)

➤ காவலாளி (25 - 35 வயதிற்குட்பட்டவர்கள்)

கீழ்க்காணும் முகவரிக்கு சுயவிபரங்களை அனுப்பி வைக்கவும்.

**வ.வ. இராமசாமிப்பிள்ளை & சன்ஸ்**
**இல. 58, குறுக்கு வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

தொடர்பு கொள்ள வேண்டிய இல:
**021 222 4766, 021 222 6806**

(CS/55579) J-1

## கதிர்காமம் உற்சவம் 06.07.2024

### விசேட பஸ் சேவை "சிங்ககிரி எக்ஸ்பிரஸ்"

யாழ்ப்பாணம் காலை - 8.20 மணி
மாலை - 3.50 மணி
வவுனியா காலை - 11.20 மணி
மாலை - 7.00 மணி
கதிர்காமம் காலை - 5.00 மணி
இரவு - 11.00 மணி
கட்டணம் - 2100/- (ஒரு வழிக் கட்டணம்)

தொடர்புகளுக்கு (யாழ்ப்பாணம்)
வரணி ஆசன பதிவகம்
352, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2868, 077 604 8921
077 791 7691, 077 153 1406




தொடர்புகளுக்கு (கதிர்காமம்)
071 130 8280, 077 529 9015, 077 978 7824

(CS/865) J-1


## மரண அறிவித்தல்

தோற்றம்
30
07
1950



மறைவு
03
07
2024

### கந்தசாமி கனகராஜா

**(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)**

சுதுமலை வடக்கை பிறப்பிடமாகவும் வவுனியா நெழுக்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி கனகராஜா 03.07.2024 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி நேசமலரின் அன்பு மகனும் சின்னத்துரை நவமணி ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும் கோபிநாத் (அமரர்), தர்சன் (முகாமைத்துவ உதவியாளர்-நீதவான் நீதிமன்றம் சாவகச்சேரி), உதயநாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சட்டத்தரணி தர்சிகா (பதிவாளர்-மாவட்ட/நீதவான் நீதிமன்றம் மன்னார்), ரேணுகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தியானா, யாதனா, வைஸ்ணவி ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார். கைலாயநாதன், தனலட்சுமி, சிறிபாலன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஈமக்கிரியைகள் 04.07.2024 அன்று அன்னாரின் சொந்த ஊரான சுதுமலை வடக்கு மானிப்பாயில் (வெள்ளுவடி வீதி) அமைந்துள்ள பூர்வீக இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3.00 மணியளவில் பூதவுடல் பிப்பிலி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**தர்சன் (மகன்)**
**077 827 2829**

(CS/42767) V-1

## யாழ்ப்பாணம் மாநகரசபை

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் -2024

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

* கேள்விப்படிவக்கட்டணம் : ரூபா 1,000.00 + Vat 18%
* கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி :- 04.07.2024 தொடக்கம் 18.07.2024 வரை (ஞாயிற்றுக் கிழமை தவிர்ந்த நாட்களில் மு.ப 9.00 - பி.ப 2.30 மணி வரை)
* கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் :- 19.07.2024 முற்பகல் 10.00 மணி வரை
* கேள்விப்படிவம் திறத்தல் :- 19.07.2024 முற்பகல் 10.00 மணிக்கு
* மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் ரூபா 2,000.00

- விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர். மாநகர சபை. யாழ்ப்பாணம் என முகவரியிட்டு நானாவித இறைவரி பகுதியில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் 19.07.2024 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும்.
- கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் கடிதம் மூலம் அனுமதியளிக்கப்பட்ட ஒருவர் சமுகமளித்தல் வேண்டும்.
- கேள்வியில் சித்தி பெற்றவர்கள் தாங்கள் சித்தி பெற்ற சகல கடைகளுக்குமான கேள்வித் தொகையினை 25.07.2024 ஆம் திகதிக்கு பி.ப 2.30 மணிக்கு முன்னர் முன்னரங்கப் பகுதியில் முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். தவறும் சந்தர்ப்பத்தில் தாங்கள் எந்தவொரு கடையையும் பெற்றுக்கொள்ள முடியாது.

மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.
கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(cr.42765) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம்
17
06
1948



மறைவு
01
07
2024

### பாக்கியநாதன் தனலட்சுமி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியநாதன் தனலட்சுமி கடந்த (01.07.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தெய்வானை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமார் - மனோகரி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பாக்கியநாதனின் அன்பு மனைவியும், சிவசரணபவன் (ஜேர்மனி), கிருஸ்ணவேணி (டென்மார்க்), மோகனபவன் (ஜேர்மனி), யோகபவன் (ஜேர்மனி), மதிவதனி (சுவிஸ்), சாந்தவதனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரஜனி (ஜேர்மனி), திசையானந்தன் (டென்மார்க்), மைதிலி (ஜேர்மனி), ஓங்காரபாலன் (சுவிஸ்), தர்சன் (கனடா) ஆகியோரின் மாமியாரும், ராஜேஸ்வரி, மகேஸ்வரன் (ஓய்வுபெற்ற இலங்கை மின்சாரசபை ஊழியர்), மனோரஞ்சிதம் (ஜேர்மனி), காலஞ்சென்ற யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் Friedhof Styrum, herdewegg in 45476 mulheim ander Ruhr இல் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**மகன் - ஜேர்மனி**
**0049 172 260 7388**

**தகவல்:**
**சகோதரம் - மகேஸ்வரன்**
**021 221 6571**

(CS/55573) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலங்கார உற்சவம்

யாழ், ஜூலை 4

ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவம், நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாக வுள்ளது. ஆலயத்திரு விழாவின் பூசைகள் தினமும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி 6.30 மணிக்கு நிறைவடையும். எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் இடம் பெறுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

(ப)

# மரண அறிவித்தல்



தோற்றம்
02 - 05 - 1946

மறைவு
03 - 07 - 2024

## லோகாம்பிகை காசிநாதன்

நாவலி தெற்கு, (மாரியம்மன் வீதி) மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லோகாம்பிகை காசிநாதன் நேற்று (03.07.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தவமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற காசிநாதன் அவர்களின் அன்பு மனைவியும், பார்த்திபன், குணசீலன், உதயநாதன் (மில் உரிமையாளர் நவாலி), சொரூபன் ஆகியோரின் அன்புத் தாயும், கவிதா (மானிப்பாய் ப.நோ.கூ.ச), நந்தினி (கோண்டாவில் இ.போ.ச), வசந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான குகாநந்தன், பாலமனோன்மணி ஆகியோரின் அன்புத் தங்கையும், அருணகிரிநாதன் (சுவிஸ்), சிவானந்தன் (அவுஸ்ரேலியா), ஶ்ரீதேவி (ஜேர்மனி), ஜோன்ராஜன் (சுவிஸ்), உதயகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மோகனா, கஜீபன், பிரியங்கி, பிருதிகா, தஸ்மிதா, திவாகரன், அபிலாஷ், துளசிகரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 519 2191 - பார்த்திபன் (நிதி)
077 180 3975 - குணசீலன் (குணா)
077 151 4205 - உதயன்

(cs 55578) (N-1)

# ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 2 காங்கேசன்துறை வீதி 984 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் பி.தியாகராசஐயர் என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை பாக்கியநாதன் பரந்தாமன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு செ.ந.விஸ்வலிங்கம் முகதாவில் 2001.01.30ல் 1883ம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 2 குளி 4.2 அளவுடைய ஆதனம் எனது நினைவிற்கெட்டாத காலத்தில் இருந்து எனது ஆட்சியில் உள்ளது என்றும், குறித்த ஆதனத்தை எனது மூதாதையரும் பின் தானும் இடையீடின்றித் தொடர்ச்சியாகவும், எவரது தலையீடோ குழப்பமோ இன்றியும் எவருக்கேனும் வாடகையோ, பயன்களோ செலுத்தாமலும், எவரது உரித்தையும் அங்கீகரிக்காது எதிர் உதித்தாகவும் உடமைகொண்டு ஆண்டனுபவித்து வருவதனால் ஆட்சி உரிமைப்படி இவ்வாதனம் எனக்குரியதென வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் இலக்கம் 996 காங்கேசன்துறை வீதியைச்சேர்ந்த பாக்கியநாதன் பரந்தாமன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு செ.ந.விஸ்வலிங்கம் முகதாவில் 2010.07.26 ம் திகதி 3976 ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் மேற்படி அதே அளவுகொண்ட ஆதனத்தை அதே இடத்தைச் சேர்ந்த தனது சகோதரி சுந்தரலிங்கம் சுந்தரகுமார் பெண் பவானி என்பவருக்கு அழியா நன்கொடையளித்துள்ளார்.

## ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கோவிற் பற்று, வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை, "மூன்றாம் விளாத்தியடி" நிலப்பரப்பு இரண்டு குளி நான்கு தசம் இரண்டு ( நில.பர.2 குளி 4.2)ம் கடைக்கட்டடங்களும், பயிர்வகைகளும். இந்த நிலப்பரப்பு 2 குளி 4.2 ற்கும் எல்லை

| | |
|---|---|
| கிழக்கு | - தம்பிப்பிள்ளை கைம்பெண் இராசநாயகத்திற்கும் பெண் கனகலட்சுமிக்கும் எனக்குமுரிய ஆதனங்கள் |
| வடக்கு | - எனக்குமுரிய வேறு ஆதனம் |
| தெற்கு | - பி.தியாகராஜா ஐயருக்குரிய ஆதனம் |
| மேற்கு | - காங்கேசன்துறை வீதி |

இதனடங்கலும் இதைச்சேர்ந்தவைகளும் இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ.என். குழந்தைவேலு அவர்களால் அளந்து வரையப்பட்ட 14 ம் இலக்கப்படத்தில் 1ம் இலக்கத் துண்டாகச் சுட்டப்பட்டுள்ளது.

தற்போது இவ்வாதனத்தை சுந்தரலிங்கம் சுந்தரகுமார் பெண் பவானி என்பவர் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சுந்தரலிங்கம் சுந்தரகுமார் பெண் பவானி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ். மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆணையாளர், மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(cr.42763) (N-1)

# அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு

கடந்த 05.06.2024 புதன்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

அமரர்

## செல்லத்துரை சிவராசா

(ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர் - புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)



அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.07.2024) வியாழக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் சபிண்டிகரணக் கிரியைகள் இடம்பெறும். மறுநாள் (05.07.2024) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாவில் ஒழுங்கை,
புலோலி கிழக்கு, புலோலி.

குடும்பத்தினர்

(CS/55555) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறு. திருமுருகனால்...

மகளிர் இல்லத்தில் பெண்பிள்ளைகள் குளிக்கும் இடத்தில் பொருத்தப்பட்ட கண்காணிப்புக் கமராக்களால் சிறுமிகள் குளிப்பதும், உடைமாற்றுவதும் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும், இதனால் சிறுமிகளின் உரிமை மீறப்படுவதாகவும், அவர்கள் சமூகச் சீரழிவுகளை எதிர்கொள்வதாகவும் வழங்கப்பட்ட முறைப்பாடுகளையடுத்தே குறித்த இல்லத்தை மூடும் உத்தரவை ஆளுநர் பிறப்பித்துள்ளார். மற்றைய இல்லம் முறையான அனுமதி பெறப்படாத காரணத்தால் மூடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

ஆறு.திருமுருகனால் நடத்தப்பட்டு வரும் மகளிர் இல்லத்துக்கு கடந்த மே மாதம் 29 சிறுமிகள் மலையகத்திலிருந்து அழைத்து வரப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் 16 மற்றும் 17 வயதுடைய சிறுமிகளாவர். சிறுமிகளுக்கான விடுதியில் தங்கவைக்கப்பட வேண்டிய அவர்கள் 18 வயதுக்கு மேற்பட்டோரைத் தங்கவைக்கும் பெண்கள் விடுதியிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அந்த விடுதியில் 10 குளியலறைகள் காணப்படுகின்றபோதிலும், அவை அனைத்தும் விடுதிப் பராமரிப்பாளர்களின் பயன்பாட்டுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளன. சிறுமிகளுக்கு வெளிப்புறமாக நீர் நிரப்பப்பட்ட தொட்டியொன்றே குளிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு சிறுமிகள் குளிப்பதற்காக ஒதுக்கப்பட்ட பகுதியே கண்காணிப்புக் கமராவால் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாம் குளிக்கும் இடத்துக்கு மேற்புறமாக கண்காணிப்புக் கமரா பொருத்தப்பட்டிருப்பதை அவதானித்த சிறுமிகள், அதுதொடர்பில் தமது பெற்றோருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். விடயம் தொடர்பில் சிறுமிகளின் பெற்றோர் இல்லத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது, பாதுகாப்புக் காரணங்களுக்காக வீதியைப் பதிவுசெய்வதற்காகவே கமரா பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், வீதியைப் படமாக்கும் கோணத்தில் சிறுமிகள் குளிப்பதும், உடைமாற்றுவதும் பதிவுசெய்யப்படுவதாகத் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. இது தொடர்பில் தெல்லிப்பழை பிரதேச செயலரிடம் ஜூன் மாதம் 12ஆம் திகதி முறையிடப்பட்டுள்ளது. ஆனால், ஜூன் 24ஆம் திகதிவரை அவர் இதற்குரிய நடவடிக்கையோ அல்லது விசாரணையோ மேற்கொள்ளவில்லை. இதன் பின்னர் மேலிடங்களுக்கும், ஆளுநரின் கட்டுப்பாட்டில் இயங்கும் அபயம் பிரிவினருக்கும் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே தெல்லிப்பழை பிரதேச செயலகத்தால் சில அதிகாரிகள் கள விசாரணைக்காகச் சென்றுள்ளனர். இதன்போது, 2023ஆம் ஆண்டு பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு அமையவே கமரா பொருத்தப்பட்டதாக சிறுவர் இல்லத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், வீதியைக் கண்காணிக்கும் படியாகத்தான் கமரா பொருத்தும்படி தெரிவித்ததாகவும், மேற்படி சர்ச்சைக்குரிய இடத்தில் பொருத்துமாறு எந்த அறிவித்தலும் வழங்கப்படவில்லை என்றும் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பான விரிவான அறிக்கை ஆளுநருக்கு வழங்கப்பட்டதையடுத்து, அறிக்கைகளின் பிரகாரம் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை உடனடியாக மூடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன், அனுமதி பெறாத மற்றொரு இல்லத்தையும் மூடுமாறு பணிக்கப்பட்டுள்ளது. விடயம் தொடர்பான அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளருக்கு ஆளுநரால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் இயங்கும் சிறுவர் இல்லங்கள் தொடர்பில் மேற்பார்வை செய்து ஒரு வாரத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. பதிவு செய்யாமல் இயங்கும் அனைத்து சிறுவர் இல்லங்களையும் உடனடியாக மூடுவதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

வெளி மாகாணங்களில் உள்ள சிறார்களை வரவழைத்து வடக்கு மாகாணத்திலுள்ள சிறுவர் இல்லங்களில் தங்க வைக்க அனுமதி வழங்கவேண்டாம் எனவும், அவ்வாறு தங்க வைக்கப்பட்டிருப்பின் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அவர்களை சொந்த ஊருக்கு திருப்பி அனுப்பி வைக்குமாறும் ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம -26)

## மூன்று...

சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் ஆணையாளராக திருமதி சி.சுஜீவாவும், வடக்கு மாகாண மோட்டார்போக்குவரத்துத்திணைக்களத்தின் ஆணையாளராக திருமதி கு.காஞ்சனாவும், வடக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலாளராக (நிர்வாகம்) திருமதி அ.யோ.எழிலரசியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மூவருக்குமான நியமனக் கடிதங்கள் நேற்றுப் புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன. (ம-125-26-27-66)

## படகு...

விபத்துக்குள்ளாகியுள்ளது. நால்வரும் கரையை நோக்கி நீந்தியபோது, மூவர் கிராம மக்களின் உதவியுடன் மீட்கப்பட்டனர். ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். உயிரிழந்தவரின் சடலம் புங்குடுதீவு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-20,27)

## குளவி....

யால் கொட்டப்பட்ட அவர், சங்கானை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கு மேலதிக சிகிச்சைகள் வழங்கப்பட்ட பின்னர், நேற்றுத் தெல்லிப்பழை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது உயிரிழந்ததாக மருத்துவர்கள் அறிவித்துள்ளனர்.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-26)

## விபத்தில்...

ளது. பட்டா ரக வாகனமொன்றே விபத்தில் தொடர்புபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சிறுமியின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்ட நிலையில், வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-19)

## சம்பந்தனின்...

செல்வா அரங்கில் அவரின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளதாகத் தமிழரசுக் கட்சியின் உயர் மட்டத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

நாடாளுமன்றத்தில் நேற்றுமாலை 4 மணிமுதல் சம்பந்தனின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

சபாநாயகர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், நாடாளுமன்ற அலுவலக அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு சம்பந்தனின் புகழுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். (ம-26-125-66)

## வடக்கு...

எதிர்வரும் 7ஆம் திகதிவரை மழை கிடைக்கும் என்று வானிலையாளரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான நாகமுத்து பிரதீபராஜா எதிர்வுகூறியுள்ளார்.

வெப்பச் சலனச் செயற்பாட்டின் காரணமாக இடி, மின்னலின் தாக்கம் அதிகம் இருக்கும் என்பதால் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் அவர் மேலும் எச்சரித்துள்ளார். (ம-66)

## பொலிஸார்...

வாய்க்கிழமை இரவு இளைஞர்கள் குழுவொன்று அமைதியின்மையை ஏற்படுத்துவதாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இதன்பிரகாரம் பேருந்து நிலையத்துக்கு விரைந்து சென்ற பொலிஸ்குழு அங்கு அமைதியின்மையை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் நான்கு இளைஞர்களைக் கைதுசெய்ய முயற்சித்தபோது இளைஞர்கள் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். தாக்குதலில் இரு பொலிஸார் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

இதையடுத்து, பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியமை, கடமைக்கு இடையூறு விளைத்தமை, பொதுவிடத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களில் மேற்படி நான்கு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான நான்கு இளைஞர்களும் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் எனவும், நால்வரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (ம-66,20)

## சுதந்திரபுரத்தில்...

யில் காணப்பட்ட அவர் மூங்கிலாறு மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்ட நிலையில், அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்ததை உறுதிப்படுத்தியுள்ளனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக உத்தரவிடப்பட்ட நிலையில், சடலத்தின் கழுத்துப் பகுதியில் காயங்கள் காணப்படுவதாகவும் இது திட்டமிடப்பட்ட கொலையாக இருப்பதற்கு அதிக சாத்தியங்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த அன்றைய இரவு குறித்த நபர் தனது சக நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்தினார் என்பது பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-19)

## காங்கேசன்துறையில்...

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் இன்று காலை இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது. நான்கு அணிகளாக இந்த மோட்டார்சைக்கிள் படையணி உருவாக்கப்படவுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-125)

# பல்கலைக்கழக விண்ணப்பங்களின் காலம் நாளையுடன் நிறைவு!

கொழும்பு, ஜூலை 4

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்கும் காலம் நாளை வெள்ளிக்கிழமையுடன் நிறைவடையவுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எனவே, உரிய காலப் பகுதிக்குள் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கான விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் www.ugc.ac.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்துக்குள் பிரவேசித்து விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியுமெனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சாவுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 4

கோண்டாவில் பகுதியில் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவரை கோப்பாய்ப் பொலிஸார் கடந்த சனிக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

புலனாய்வுத் தகவலுக்கமைய கோண்டாவில் மத்திக்கு விரைந்த பொலிஸார் விசேட சோதனை மேற்கொண்டபோது சந்தேகநபரிடமிருந்து 103 கிராம் கஞ்சாவை கைப்பற்றினர்.

சந்தேகநபருக்கு எதிராக யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-125)

## நிரந்தர நியமனம் வேண்டும்

கொழும்பு, ஜூலை 4

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் 2 ஆயிரம் ஊழியர்கள், தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது மேலதிகாரிகள் தமது நியமனம் பற்றி அக்கறையின்றி செயற்பட்டு வருவதாகவும் அவர்களது நியமனம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதால் நிரந்தர நியமனம் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ப-6)

# கடலுணவுகள் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். குடாநாட்டில் கடலுணவுகளின் விலை அதிகரித்துள்ளதாக நுகர்வோரால் தெரி[illegible]கப்படுகிறது.

தற்போதை[illegible]லநிலை மாற்றம் காரணமாக [illegible]த் தொழில் வெகுவாகப் பாதி[illegible]ளது.

இதனால் சந்[illegible]டலுணவுகளின் வருகை கணி[illegible]வடைந்துள்ளதுடன் அவற்[illegible] அதிகரித்துள்ளது. பெரிய ம[illegible]லோ ஆயிரத்து 500 ரூபாவாகவும், நண்டு 2 ஆயிரம், கணவாய் 2 ஆயிரத்து 400, இறால் 2 ஆயிரத்து 400 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

(ச-25-17)


**விசாக்கான Show money**

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

**1%**
- visit visa
- student visa
- fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்.

தொடர்பு:- **075 033 6759**

(CS/55565) J-1

**வங்கி மீதி வசதி (SHOW MONEY)**

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

**074 173 7684**

(CS/55548) J-1


# நீங்கா நினைவலைகள்

13ஆம் ஆண்டு 14ஆம் ஆண்டு

பிறப்பு 05.02.1933

பிறப்பு 04.06.1935



இறப்பு 30.06.2011

இறப்பு 16.08.2010

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் வேலுப்பிள்ளை பூபாலசிங்கம்

(காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன முன்னாள் உத்தியோகத்தர்)

**திதி: அபரபக்க சதுர்த்தசி (04.07.2024)**

உங்கள் இருவரையும் தேடி ஊர் உலகம் தேடி
நாயாய் அலைகின்றோம் எப்போ கிடைப்பீர்கள்?
யாரைக் கேட்கிறது எங்கே ஆறுவோம்?

அம்மாவின் பிரிவுத்துயர் தாழாமல்
அவரோடு நீங்களும் சென்றது ஏன் தொடர்ந்து?
உங்கள் திருமண தினத்தன்று
அக்கினியில் நீங்கள் செய்துகொண்ட
சத்தியம் தான் காரணமோ?

வேதனைகள் வேர் வரை சென்றாலும்
விழுதுகளாய் எம்மைத் தாங்கினீர்கள்!
உங்கள் இருவரின் குரல் கேட்காமல்
பரிதவிக்கும் எங்கள் குமுறல்கள்
உங்கள் காதுகளில் கேட்கிறதா?

ஊர் விட்டு வந்து நம் சொந்த ஊருக்கு
திரும்ப முடியாமல் தவித்த தவிப்பும்
இப்போ ஊருக்கு போகு நிலை வந்தும்
போவதற்கு நீங்கள் இல்லையே அப்பா....

உயரங்கள் நாம் காண எம்
வாழ்க்கைப் பயணத்தில் துணையாய் இருந்த
ஈரிரண்டு கண்களையும் கண்கெட்ட
எமனுக்கோ பொறுக்கவில்லை

நாள்கள் வாரமாகி வாரங்கள் மாதமாகி
மாதங்கள் ஆண்டாகி போனாலும்
ஆறவில்லை எங்கள் துயர்

உங்கள் வார்த்தைகள் எம்மை வாழவைக்கும்
உங்கள் நினைவுகள் எம்மை வாழ்த்திடும்

## திருமதி பாக்கியம் பூபாலசிங்கம்

**திதி: பூர்பக்க அட்டமி (12.08.2024)**

அம்மா நீ சென்ற கணமும்
அம்மா நீ சொன்ன வார்த்தைகளும்
அம்மா நீ செய்த உன்னதங்களும்
அம்மா நீ தந்த நெறிகளும்
எம் நெஞ்சினில் என்றும் அழியாதம்மா
எழுகின்ற கேள்விகளுக்கெல்லாம்

நாளும் விடை தேடுகின்றோம் அம்மா!
எங்கள் வலிகளைத் தாங்க
யாருமே இல்லையம்மா
அப்பா அம்மா இல்லாத
அநாதைகளானோம் அம்மா
அந்த இறைவனே கண்ணீரைப் பரிசாகத் தந்து
மௌனம் காணுகின்றார் அம்மா

அன்பு அம்மாவே!
கொடிய நோய் வடிவில் காலன்
கொன்றுவிட்டானே உங்களை
அன்று மாலைவரை நீங்கள் புரிந்த அன்பு மழை
இன்னும் எம் கண்முன்னே வந்து செல்லுதம்மா.....

நாடு கடந்து வந்து நாம் உங்களைக் கண்டு
நாளும் பொழுதும் மகிழ்ந்து இருந்த கணங்களும்
மருமகளையும், பேரப்பிள்ளைகளையும்
நீ கொஞ்சிக் குலாவிய தருணங்களும்
என்றும் உங்களை நினைவூட்டுகின்றது அம்மா......

நீங்கள் எனக்காக கட்டிய வீடு
இன்று பாலைவனமாய் கிடக்கின்றது
நீங்கள் இன்று இருந்திருந்தால்
நீங்களாவது அந்த வீட்டில் இருந்திருப்பீர்களே அம்மா......
உயிரைத் தந்து உடலில் சுமந்து
உலகில் வாழ உருவம் தந்த
தெய்வம் நீயம்மா!

**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!**


என்றும் உங்கள் நினைவுகளுடன்

**மாதகல் மேற்கு,**
**மாதகல்.**

(CS/55514) J-1

**குடும்பத்தினர்**
மகன் - 077 774 3185

# மரண அறிவித்தல்



பிறப்பு 01.10.1965

இறப்பு 03.07.2024

## Eng.சந்திரசேகரம் ஞானேஸ்வரன்

(Deputy General Manager - Lanka Mineral Sands, Company, Pulmottai)

யாழ்ப்பாணம், கொட்டடி சீனிவாசகம் வீதியைப் பிறப்பிடமாகவும், இணுவில் பாலாவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் ஞானேஸ்வரன் நேற்று (03.07.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம் - இராசலட்சுமி (சேர், டீச்சர்- ஓய்வுநிலை ஆசிரியர்) தம்பதியரின் அன்பு மகனும், மகேந்திரநாதன், காலஞ்சென்ற சத்தியேஸ்வரி (நயினாதீவு) தம்பதியரின் அன்பு மருமகனும், கீதாஞ்சலியின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - தெல்லிப்பழை பிரதேச செயலகம்) அன்புக் கணவரும், நிதர்சனன் (software engineer- Colombo), குருதர்ஷன் (Web developer ICBT) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானபண்டிதன் (முன்னாள் முகாமையாளர் (செலான் வங்கி), ஞானகுமார் (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையர் அலுவலகம், யாழ்ப்பாணம்), ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். மல்லிகாதேவி (ஓய்வுநிலை ஆசிரியை), ஜெயந்தி (ஆசிரியை), பிரியதர்ஷினி (Germany), தாட்சாயினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் திருகோணமலை), துஸ்யந்தன் (France), குகேந்திரராஜா (Germany), Eng.ஆம்ஸ்ரோங் (Somalia), கிருஷ்ணலீன் - அமுதா (France) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2024) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

தொடர்பு:
**ஞானபண்டிதன்: 077 308 3782**
**மோகனரூபன்: 077 502 4745**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 ... விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, இல. 361 ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org